**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.12/2020</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் நாள் திங்கள் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீவானந்தம் | தந்தை பெயர் | : மதுரைவீரன் |
| ஜாதி | : | | கிராமம் | : |
| வட்டம் | : | | மதம் | : |
| தொழில் | : | | வயது | : |

நாள் : 20.07.2026

**P.W. : 1**

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் 1ம் வாதி ஆவேன். திருச்சிராப்பள்ளி, பூலோகநாதசுவாமி கோவில் தெரு, டவுன் சர்வே எண்.5, 6, 7 க்கான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பீல்டு ரெஜிஸ்டர் உண்மை நகல் **வா.சா.ஆ.15** ஆகும். மேற்படி சர்வே எண்களுக்கான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட புல வரைபடம் உண்மை நகல் **வா.சா.ஆ.16** ஆகும். T.S.No.79 க்கான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ்

பெறப்பட்ட புல வரைபட உண்மை நகல் **வா.சா.ஆ.17** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**(1 முதல் 9, 14 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)**

<u>10, 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனது பிறந்ததேதி 21.08.1954 ஆகும். என்னிடம் பிறப்பு சான்றிதழ் இல்லை. என் தாத்தா பெயர் கருப்பண்ண மேஸ்திரி ஆகும். அவரது அப்பா பெயர் ஆறுமுகம். தாவா 1 வது அயிட்ட சொத்தான T.S.No.5,6,7 ல் கண்ட சொத்து என் தாத்தா கருப்பண்ணனின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்து என் தாத்தா தனிப்பட்ட வகையில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். என் தாத்தா கருப்பண்ணனுக்கு ராஜமாணிக்கம் மற்றும் மார்கேசன் ஆகிய இரண்டு மகன்களும், பங்கஜவள்ளி மற்றும் ரஞ்சிதம் (எ) மனோ ரஞ்சிதம் ஆகிய இரண்டு மகள்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். வாதிகளாகிய நாங்கள் 5 பேரும் மற்றும் 13 ம் பிரதிவாதியும் ரஞ்சிதம் (எ) மனோ ரஞ்சிதத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். 1 முதல் 9 பிரதிவாதிகள் மற்றும் ஜெயசந்திரன் என்ற மகனும் பங்கஜவள்ளியின் வாரிசுகள் என்றால் சரிதான். ஜெயசந்திரன் இறந்துவிட்டார். பங்கஜவள்ளியின் வாரிசுகளான 1 முதல் 9 பிரதிவாதிகள் மற்றும் ஜெயசந்திரனின் வாரிசுகளான 14, 15, 16 பிரதிவாதிகளுக்கும் வாதிகளாகிய எங்களுக்கு இடையே விரோதம் எதுவுமில்லை என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகளும் தாவா சொத்தில் தங்களுக்கும் பங்குண்டு என்று கட்சி செய்கிறார்கள். வழக்கு போட்ட வாதிகளாகிய நாங்களும், 1 முதல் 9, 13 முதல் 16 பிரதிவாதிகளும்

கருப்பண்ணனின் பெண் வாரிசுகளின் மக்கள் என்றால் சரிதான். என் பெரியம்மா பங்கஜவள்ளி 26.10.1999 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயார் ரஞ்சிதம் (எ) மனோ ரஞ்சிதம் 22.11.2017 ல் இறந்துவிட்டார் என்றால் தேதி ஞாபகமில்லை. 2017 ம் வருடம் என் தாயார் இறந்தார். என் தாயாரைப் பெற்ற பாட்டி முனியம்மாள் 13.02.1981 அன்று இறந்தார் என்றால் சரிதான். என் பாட்டி இறப்பதற்கு என் தாத்தா கருப்பண்ணன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயார், பெரியம்மா மற்றும் பாட்டி ஆகியோரின் இறப்பு சான்றிதழ்கள் உள்ளன. என் தாத்தா கருப்பண்ணன், முனியம்மாள் இறப்பதற்கு சுமார் 20 வருடத்திற்கு முன்பாக இறந்ததாக என் பாட்டி சொல்லியுள்ளார். வழக்கு போடும்போதே என் தாத்தா இறந்தது பற்றி நான் மேலே சொன்ன விவரம் எங்களுக்கு தெரியும். என் தாத்தா இறந்த வருடத்தை பற்றி வழக்குரையில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரை பத்தி 4 ல் என் தாத்தா நீண்ட ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டதாக சொல்லியுள்ளோமா என்றால் அது தெரியாது. என் தாத்தாவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா தாவா 1 வது அயிட்ட சொத்தை அவர் இறப்பதற்கு முன்பே 25.09.1937 அன்றே ஈடு வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதே சொத்தை 14.11.1939 அன்று என் பாட்டி தனக்காவும் தனது மைனர் மகன்களுக்காவும் சேர்ந்து தாயுமான் பணிக்கரிடமிருந்து ஈடு மேடோவர் வாங்கினாரா என்றால் அதுபற்றி தெரியாது. 15.12.1943 அன்று தாவா 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து வெள்ளையன் பணிக்கருக்கு என் பாட்டி தனக்காகவும், தனது மைனர் மகன்களுக்காவும் சேர்ந்து ஈடு பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் அந்த

விவரம் தெரியாது. வழக்கு சொத்துக்களை பொறுத்து 1930 முதல் வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை வில்லங்க சான்று எடுத்து பார்த்தோமா என்றால் இல்லை. என் தாத்தா 1938–1939 காலகட்டத்தில் இறந்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா 1வது அயிட்ட சொத்தை என் தாய் மாமன்களான மார்கேசன் மற்றும் ராஜமாணிக்கம் ஆகியோர் ஈடு மற்றும் ஒத்தி ஆகியவை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் அதுபற்றி கேள்விப்பட்டுள்ளேன். நேரடியாக தெரியாது. வழக்கு சொத்துக்களை பொறுத்து என் தாயாருக்கோ என் பெரியம்மாவிற்கோ அவரது வாரிசுகளான வாதிகள் மற்றும் 1 முதல் 9, 13 முதல் 16 பிரதிவாதிகளுக்கும் எந்த பாக உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.